**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 219-2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 2 | | Examined as : PW 2 | |
| Name | : முருகவேல் | Defence | : |
| Father/Husband Name | : ராமசந்திரன் | Court | : |
| Village | : தலைமை காவலர், வைத்தீஸ்வரன் கோவில் காவல் நிலையம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 50/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 14.11.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை (U/s 355 of BNSS petition filed and allowed)

முதல் விசாரணை:–

நான் வைத்தீஸ்வரன் கோவில் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.01.2018ம் தேதி நான் பூம்புகார் காவல் நிலைய தலைமை காவலராக பணியில் இருந்த போது காலை 08.00 மணியளவில் மேலையூர் பூம்புகார் கல்லூரியில் சாலை மறியல் செய்வதாக கிடைத்த தகவலின் படி பெண் காவல் உதவி ஆய்வாளர் கவிதா மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மூர்த்தி மற்றும் வினோபா ஆகியோர் தலைமையில் மேலையூர் சென்றோம். அங்கு பூம்புகார் கல்லூரி முன்பு பூம்புகார் – கருவி செல்லும் சாலையில் கல்லூரி வாசல் முன்பு சாலை மறியல் மற்றும் ஆர்பாட்டம் செய்து கொண்டிருந்த 2 நபர்களை காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் அழைத்து விசாரித்த போது பேருந்து கட்டண உயர்வை கண்டித்து நாங்கள் சாலை மறியல் செய்கிறோம் என்று கூறினார்கள். அதற்கு அறிவிப்பு இல்லாமல் சாலை மறியல் செய்வது குற்ற என கூறி அவர்களை கைது செய்தார்கள். அவர்களை விசாரித்த போது ஒருவர் பெயர் ராகேஷ் சர்மா மற்றொருவர் பெயர் ராஜூ என்றும் கூறினார்கள். அவர்களை நிலையம் அழைத்து சென்று காவல் உதவி ஆய்வாளர் கவிதா அவர்கள் வழக்கு பதிவு செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் எங்களது சொந்த வாகனத்தில் சென்றோம். யார் சொல்லி சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் காவல் ஆய்வாளர் சொல்லி தான் சென்றோம். காவல் ஆய்வாளிடம் நாங்கள் சென்ற வாகனத்தின் பதிவெண்ணை கொடுத்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் உள்ள சாட்சிகள் அனைவரும் சம்பவ சமயத்தில் என்னுடன் பணிபுரிந்த காவலர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னை என்ன வகையான சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் தற்போது நினைவில் இல்லை. காவல் ஆய்வாளர் எங்களுடன் வந்தாரா என்றால் வந்தார்.

2. சம்பவ இடமானது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றாலும், அடிக்கடி வாகனங்கள் சென்று வரக்கூடிய சாலை என்றாலும் சரிதான். அங்கு நிரந்தரமான கடைகள் உள்ளது என்றால் சரிதான். பூம்புகார் கலைக்கல்லூரியில் காவலர்கள் உள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக தனி நபர்கள் யாரேனும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் காவலர்களை தவிர வேறு யாரையும் சாட்சியாக சேரக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எனது மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.